# ஊடக வெளியீடு

## தொழில் கேள்வி அளவீடு - 2017

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412** **2017 யூலை மாதம் 03**

ஒரு நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளும் பொருட்டு தொழில் கேள்விக்கு ஏற்றவாறான ஊழியம் வழங்கல் இருத்தல் வேண்டும். தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையிலுள்ள ஊழியர்படை அளவீட்டினை வருடாந்தம் நடாத்துவதன் மூலம் ஊழியம் வழங்கல் தொடர்பிலான புள்ளிவிபரங்களை வெளியிடுகின்றது. தொழில் கேள்வி பற்றிய புள்ளிவிபரங்களைத் தயாரிக்கும் முகமாக முதற் தடவையாக தனியார் மற்றும் முறைசாரா துறையிலுள்ள தொழில் கேள்வி பற்றிய அளவீடொன்றை இவ்வருடத்தின் யூலை மாதத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே. சதரசிங்க அவர்கள் கூறினார்கள்.

இந்த அளவீட்டின் பொருட்டு 3500 நிறுவனங்கள் முறைசார் மாதிரி நுட்பமுறையினூடாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அலுவலர்கள் விபரமான தரவுகளை சேகரிப்பதற்காக அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு வருகை தருவார்கள். இந்த அளவீட்டின்போது தொழில் கேள்விக்கு ஏற்புடையதான தகவல்கள் முக்கியமான சில துறைகளின் கீழ் சேகரிக்கப்படுவதுடன் அதன் கீழ் எந்தப் பதவி பொருட்டு அதிகளவான வெற்றிடங்கள் நிலவுகின்றன, அதற்குத் தேவையான கல்வி மற்றும் தொழிற்துறைத் தகைமைகள், குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்காக தற்போதுள்ள அரச மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களது பங்களிப்புக்கள் எவ்வாறுள்ளன, எதிர்கால ஆட்சேர்ப்பு பற்றிய எதிர்வு கூறல் ஒவ்வொரு தொழில் வகுதியின் கீழ் தற்போதுள்ள சம்பள அளவுத்திட்டம் போன்ற தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது, புள்ளிவிபரக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இந்தத் தகவல்களை சேகரிப்பதுடன் தங்களால் வழங்கப்படும் தகவல்களின் அந்தரங்கத்தன்மை முழுமையாக பேணப்படும். மேலும். இந்தத் தகவல்கள் புள்ளிவிபரங்களைத் தயாரிக்கும் பொருட்டு மாத்திரம் பயன்படுத்தப்படுவதுடன் இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்கள் எக்காரணம் கொண்டும் வேறொரு நபருக்கோ அல்லது தரப்பினருக்கோ வழங்கப்பட மாட்டாது என பணிப்பாளர் நாயகம் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

ஆகையினால், நாட்டின் துரித அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் முகமாக தேவைப்படும் இந்த தகவல்களை சேகரிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு யூலை மாதத்தில் வருகைதரும் திணைக்கள அலுவலர்களுக்குத் தேவையான தகவல்களை விரைவாக பெற்றுக் கொடுத்து இந்த அளவீட்டினை வெற்றிகரமாக்குவதற்கும், அதன் மூலம் சரியான திட்டமிடல் செயன்முறைக்கு பங்களிப்பு வழங்குமாறும் இந்த அளவீடு பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள சகல நிறுவனங்களிடம்/ நிறுவனத் தலைவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

கலாநிதி ஏ.ஜே. சதரசிங்க

பணிப்பாளர் நாயகம்